<u>வா.சா.1 ___ மனோகரன் ஆஜர், குறுக்கு விசாரணை :-</u>

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன் எழுதப்படிக்க தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கை என்ன சர்வே எண்ணிற்கு எவ்வளவு விஸ்தீரணத்திற்கு போட்டுள்ளேன் என்றால் புல எண்.140/1ஜி நிலத்திற்கு 4.½ ஏர்ஸ் விஸ்தீரணத்திற்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த 4.½ ஏர்ஸ் நிலத்தில் நான் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு எவ்வளவு செக்குபந்திக்குள் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் தெரியாது. யாரிடமிருந்து கிரயம் பெற்றதாக கூறியருக்கிறேன் என்றால் சகுந்தலாவிடமிருந்து கிரயம் பெற்றேன். சகுந்தலாவிற்கு அந்த சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் அவர் கணவரின் சொத்து. அவர் கணவருக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் அவருடைய பெயருக்கு பாகப்பிரிவினை ஏற்பட்டு வந்த சொத்து. வழக்கு சொத்து சகுந்தலாவின் கணவருக்கு எவ்வாறு வந்தது என்றால் அவரின் மாமனார் அவருக்கு பாகப்பிரிவினையில் கொடுத்துள்ளார். புல எண.140/1ஜி நிலத்தை சகுந்தலாவின் கணவருக்கு சகுந்தலாவின் மாமனார் பாகமாக கொடுத்தாரா என்றால் அவ்வாறுதான கொடுத்தார். நான் இவ்வழக்கில் தாக்கல் செய்த பாகபத்திரமானது தாவா புல எண்ணிற்குரிய பாகபத்திரம் என்றால் அதைத்தான் தாக்கல் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்த பாகப்பிரிவினை ஆவணத்தில் புல எண்.140/1ஜி-ல் 4.½ ஏர்ஸ் நிலம் என குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை பத்திரத்தை பொறுத்த வரையில் வழக்கு புல எண்ணை பொறுத்து எந்த பாகமும் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு அந்த சொத்து பாகப்பிரிவினை பத்திரத்தில் பாகத்தில் வந்திருந்தால் அதை ஆவணத்தை பார்த்து என்னால் கூற இயலுமா என்றால் கூற இயலாது. நான் தாக்கல் செய்த பாகப்பிரிவினை ஆவணத்தில் சகுந்தலாவின் கணவருக்கு புல எண்.140/1ஜி

எதுவும் ஒதுக்கிதரவில்லை என்று சொன்னால் சாட்சி இதற்கு பதில் அளிக்கவில்லை. புல எண்.140/1ஜி-க்கான பட்டா எண்.1458ல் அபாயி (எ) முனிய மக்கள் துரைசாமி, கிருஷ்ணன், துரைசாமி மக்கள் முனியப்பன் மற்றும் ராஜா ஆகிய நால்வர் பெயரில்தான் பட்டா உள்ளது என்றால் கூட்டாகத்தான் உள்ளது. அது **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்பட்டது. தாவா சர்வே எண்.140/1ஜி-யை பொறுத்து மேற்படி நால்வருக்கும் கூட்டுபாத்தியம் உள்ளது என்றால் சரிதான். பட்டா நான்கு நபர்கள் பெயரிலும் இருப்பதால் அனைவருக்கும் தலா 4ல் 1 பங்கு உள்ளது என்றால் நிலத்தில் கிருஷ்ணனுக்கு மட்டும்தான் பாகம். கிணற்றில் மட்டும் சரிபாதி பங்கு. அந்த பட்டாவின்படி நான்குபேருக்கும் தலா 4ல் 1 பங்கு வீதம் கிருஷ்ணனுக்கும் 4ல் 1 பங்குதான் என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரம் மற்ற வாதிகளுக்காகவும் சேர்த்துதான் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மற்ற வாதிகள் எந்த புல எண்ணில் என்ன விஸ்தீரணத்திற்கு என்னென்ன செக்குபந்திக்குள் கிரயம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. இவ்வழக்கில் வழக்கு சொத்தை அளவீடு வேண்டும் என்று நீதிமன்ற ஆணையர் மூலம் வந்து அளவீடு செய்தார்கள் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு நான் ஆட்சேபனை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையரின் வரைபடத்தில் கிணர் மட்டும் காட்டப்பட்டுள்ளது அதைசுற்றி மண்திட்டோ வழியோ தவளைவாழியோ இருப்பதாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். வபைரடத்தில் வடக்கு பக்கத்தில் ஆயில் இன்ஜின் வைத்து தண்ணிர் இரைப்பதாக சொல்லியிருக்கிறார் என்றால் சரிதான். அது எனக்கு உரிமையானது என்றால் சரிதான். அந்த கிணற்றிலிருந்து நான் குழாய் மூலமாகத்தான் என்னுடைய பாசனத்திற்கு எடுத்துச்செல்கிறேன் என்றால் சரிதான். அந்த வரைபடத்தின் மேற்கில்

பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட வீடு காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே வரைபடத்தில் தெற்கில் வீடு கட்டுவதற்கான கடகால் போட்டுள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த போட்டுள்ள கடகால் எற்கனவே வீடு இருந்ததை இடித்துவிட்டுதான் பிரதிவாதிகள் போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். ஏற்கனவே இருந்த வீட்டின் ஒருபக்க சுவற்றை விட்டு விட்டு ஒரு அடிதள்ளிதான் கட்டிவருகிறார்கள் என்றால் முழுவதும் எடுத்துவிட்டுதான் கட்டுகிறார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் கடகாலை ஒட்டி சுவர் அப்படியேதான் உள்ளது என்றால் சரிதான். தற்போதும் அந்த சுவர் அப்படியேதான் உள்ளது என்றால் இல்லை. ஏற்கனவே இருந்த மின் இணைப்பு தற்போது அந்த சுவற்றில்தான் இருக்கிறது என்றால் தற்போது இல்லை. தற்பொழுதும் அந்த சுவர் உள்ளது என்றும் அதில் துண்டிக்கப்படாத மின் இணைப்பும் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. ஆணையர் தாக்கல் செய்த வரைபடத்தில் வழக்கு சொத்தில் கால்வாயோ வழியே குறிப்பிட்டு கூறியிருக்கிறா என்றால் வாய்க்கால் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். வழி இல்லை என்றால் வழியில் கடகால் போட்டுள்ளார்கள். அந்த வரைபடத்தில் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட வீட்டின் பின்புறம்தான் கால்வாய் இருப்பதாக ஆணையர் காண்பித்துள்ளார் என்றால் சரிதான். அங்குமட்டும்தான் காண்பித்துள்ளார். கட்டிடம் கட்டி வழியை மறித்துள்ளதாக கூறுவது பொய்யானது என்றும், அது காலம் காலமாக வீடு உள்ளது என்றும், அதை இடித்துதான் தற்போது புதியதாக கட்டிவருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. நானும் மற்ற வாதிகளும் தாவா புல எண்ணில் எவ்வளவு விஸ்திரணத்திற்குள் எந்த செக்குபந்திக்கு கிரயம் பெற்றதாக கூறாத நிலையில் தாவா கோரியுள்ள பரிகாரங்கள் அடைய அருகர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவாசொத்தில் உள்ள கிணற்றிற்கும் பிரதிவாதிகள் கட்டியுள்ள வீட்டிற்கும்

சுமார் 30 அடி தூரம் இருக்கும் எநன்றால் அவ்வளவு இருக்காது எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 10லிருந்து 20 அடி இருக்கும். ஆணையர் தன்னுடைய வரைபடத்தில் சுமார் 10 மீட்டர் தூரம் இருப்பதாக குறிப்பிட்டு கூறியிருக்கிறார் என்றால் அவ்வளவு வருவதில்லை. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்களுக்கு வடக்கில்தான் என்னுடைய சொத்துக்கள் உள்ளன என்றால் சரிதான். தெற்கிலும் உள்ளது. வடக்கில் உள்ள சொத்துக்கள் வைத்துள்ள ஆயில் இன்ஜின் மூலமாக பைப் லைன் மூலம் தண்ணீா எடுத்துச்செல்கிறேன் என்றால் சரிதான். தெற்கில் உள்ள மற்ற சொத்துக்களுக்கும் பைப்லைன் மூலம் தண்ணீா் எடுத்துச்செல்கிறேன் என்றால் சரிதான். அந்த பைப் லைனானது இன்ஜினிலிருந்து வடக்கு நோக்கி சென்று மேற்கு நோக்கி சென்று பின்பு தெற்கு நோக்கி வருகிறது என்றால் சரிதான். கிணற்றலிருந்து தற்போது கடகால் போட்டிருக்கும் வீடு வரை எந்த ஒரு பைப் லைனும் இல்லை என்றால் ஏற்கனவே வாய்க்கால் இருந்தது அதை எடுத்துதான் கடகால் போட்டுள்ளார்கள். என்னுடைய வழக்கிலோ பிரமாண வாக்குமூலத்திலே ஏற்கனவே கால்வாய் இருந்ததாகவும் அதை எடுத்துபோட்டுவிட்டதாக கூறியிருக்கிறேனா என்றால் கூறியிருக்கிறேன். அவ்வாறு எந்த விவரமும் கூறவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் ஏற்கனவே வீடு இருந்த இடத்தில் தான் வீடு கட்டி வருவதால் எங்களுக்கு இடையூறு ஏற்பட்டதாக அக்கிரமமாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வீடு கட்டும் இடமும் கிணறும் கூட்டாக இருப்பதால் யாருக்கும் குறிப்பிட்டு அளவுகள் இல்லை. தாவா சொத்தில் சகுந்தலாவிற்கு சொத்து எதுவும் தனியாக பிரித்துக்கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். அதனால் தனியாக பிரிக்கப்படாத சொத்தை அவர் விற்பனை செய்ததும்

நாங்கள் கிரயம் வாங்கியதும் செல்லாது என்று சொன்னால் சரிதான். தவறான பத்திரத்தை அனுசரித்து நீதிமன்றத்தில் பரிகாரம் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் ஏற்கனவே சுவாதீனத்தில் இருந்த இடத்தில்தான் வீட்டை கட்டி வருகிறார்கள் என்றும் அதை ஆட்சேபிக்க எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் ஆகிய எங்களுக்கு வழக்கு சொத்தில் கூட்டு பாத்தியம் இருப்பதாக சொல்வது தவறானது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் கூறுவதுபோல் வழக்கு சொத்தில் கால்வாய் இருப்பதாகவும் அதை பிரதிவாதிகள் தடைசெய்வதாகவும் வழக்கு தாக்கல் செய்யவேண்டி பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நானும் மற்ற வாதிகளும் பிரதிவாதிகளுக்கு எதிராக பரிகாரம் அடைய தகுதியானர் அவல் என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் கூறியுள்ள வழக்கு மூலமே இல்லை என்று சொன்னால் சரியல்ல. சமநிலை வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா செலவுத்தொகையடன் தள்ளுபடி ஆக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.